## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 8-6 - எல்லியும்
**(ஆழ்வாரது பெருவிடாய் தீரக் கலக்கக் கருதித் திருமால் திருக்கடித்தானத்தில் சேவை சாதிக்க, ஆழ்வார் தாம் தரித்தமை கூறுதல்)**

3502 * எல்லியும் காலையும் * தன்னை நினைந்தெழ *
நல்ல அருள்கள் * நமக்கே தந்து அருள் செய்வான் **
அல்லியந்தண்ணந்துழாய் * முடி அப்பனூர் *
செல்வர்கள் வாழும் * திருக்கடித்தானமே 1

3503 திருக்கடித்தானமும் * என்னுடைச் சிந்தையும் *
ஒருக்கடுத்து உள்ளே * உறையும் பிரான் கண்டீர் **
செருக்கடுத்து அன்று * திகைத்த அரக்கரை *
உருக்கெட * வாளி பொழிந்த ஒருவனே 2

3504 ஒருவர் இருவரோர் * மூவரென நின்று *
உருவு கரந்து * உள்ளுந்தோறும் தித்திப்பான் **
திரு அமர் மார்வன் * திருக்கடித்தானத்தை *
மருவி உறைகின்ற * மாயப் பிரானே 3

3505 மாயப் பிரான் * என வல்வினை மாய்ந்தற *
நேசத்தினால் * நெஞ்சம் நாடு குடி கொண்டான் **
தேசத்தமரர் * திருக்கடித்தானத்தை *
வாசப்பொழில் மன்னு * கோயில் கொண்டானே 4

3506 கோயில் கொண்டான் * தன் திருக்கடித்தானத்தை *
கோயில் கொண்டான் * அதனோடும் என் நெஞ்சகம் **
கோயில் கொள் * தெய்வம் எல்லாம் தொழ * வைகுந்தம்
கோயில் கொண்ட * குடக்கூத்த அம்மானே 5

3507 கூத்த அம்மான் * கொடியேன் இடர் முற்றவும் *
மாய்த்த அம்மான் * மதுசூத அம்மான் உறை **
பூத்த பொழில் * தண்திருக்கடித்தானத்தை *
ஏத்த நில்லா * குறிக்கொண்மின் இடரே 6

3508 கொண்மின் இடர் கெட * உள்ளத்துக் கோவிந்தன் *
மண் விண் முழுதும் அளந்த * ஒண்தாமரை **
மண்ணவர் தாம் தொழ * வானவர் தாம் வந்து *
நண்ணு திருக்கடித்தான நகரே 7

3509 தான நகர்கள் * தலைச்சிறந்து எங்கெங்கும் *

வான் இந்நிலம் கடல் * முற்றும் எம் மாயற்கே **
ஆனவிடத்தும் * என் நெஞ்சும் * திருக்கடித்
தான நகரும் * தனதாயப் பதியே 8

3510 தாயப் பதிகள் * தலைச்சிறந்து எங்கெங்கும் *
மாயத்தினால் * மன்னி வீற்றிருந்தான் உறை **
தேசத்தமரர் * திருக்கடித்தானத்துள் *
ஆயர்க்கு அதிபதி * அற்புதன் தானே 9

3511 அற்புதன் நாராயணன் * அரி வாமனன் *
நிற்பது மேவி * இருப்பது என் நெஞ்சகம் **
நற்புகழ் வேதியர் * நான்மறை நின்றதிர் *
கற்பகச் சோலைத் * திருக்கடித்தானமே 10

3512 * சோலை திருக்கடித்தானத்து * உறை திரு
மாலை * மதிள் குருகூர்ச் * சடகோபன் சொல் **
பாலோடு அமுதன்ன * ஆயிரத்து இப்பத்தும் *
மேலை வைகுந்தத்து * இருத்தும் வியந்தே 11

**அடிவரவு:** எல்லி திரு ஒருவர் மாய கோயில் கூத்த கொண்மின்
தான தாய அற்புதன் சோலை இருத்தும்